**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.149/2018
Sessions) ( Prosecution P.W.1 சுந்தர் (எ) சுந்தர்ராஜ்
Deposition of witness for (Defence
(Court

**Accused absent. Petition filed.**

**குறுக்கு விசாரணை**

நான் சென்ற இருசக்கர வாகனம் கல்யாணகுமார் என்பவருக்குச் சொந்தமானது. அதனை பிதுன்குமார் (எ) மாயாண்டி என்பவர் ஓட்டிவந்தார். நான், கல்யாணகுமார், பிதுன்குமார் ஆகிய மூவரும் ஒரே இருசக்கர வாகனத்தில் சென்றோம். பிதுன்குமார் வாகனம் ஓட்டும்போது தலைக்கவசம் அணியவில்லை. இருசக்கர வாகனத்தில் இரண்டு பேர் செல்வதற்கு தான் அனுமதி. நாங்கள் செண்பகத்தோப்புக்கு வீட்டிலிருந்து காலை 07.00 மணிக்கு கிளம்பினோம். வீட்டிலிருந்து செண்பகத்தோப்பு சுமார் 10 கி.மீ தூரம் இருக்கும். சுமார் அரைமணிநேரம் ஆகும். திருவில்லிபுத்தூரிலிருந்து செண்பகத்தோப்பு செல்லும் சாலை மரங்கள் அடர்ந்த குறுகிய சாலையாகும். செண்பகத்தோப்பு பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி ஆகும். அங்கு குறிப்பிட்ட நேரத்தில் தான் குளிக்க அனுமதி உண்டு. நாங்கள் எத்தனை மணிக்கு உள்ளே சென்றோம் என்று நேரம் நியாபகம் இல்லை. வனப்பகுதிக்குச் செல்வதற்கு நுழைவுச்சீட்டு வாங்கித்தான் செல்லவேண்டும். வனப்பகுதிக்குள் அதிகாலையில் அனுமதி இல்லை என்று சொன்னால் சரிதான். நாங்கள் வனப்பகுதிக்குள் சட்டவிரோதமாக அத்துமீறித்தான் உள்ளே சென்றோம் என்று சொன்னால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் நாங்கள் மூன்று பேர் மது அருந்துவிட்டு வந்தது தான் விபத்திற்கு காரணம் என்று சொன்னால் சரிய்லல.

**மறு விசாரணை** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th day of November 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**